**இரண்டாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.**

**O.S. 53/2021**

**பி.வா.சா. 3 - கந்தசாமி**

**Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873 of the day of 10.11.2025.**

**முதல் விசாரணை தொடரச்சி**.

நான் கொண்டு வந்துள்ள ஆவணம் கிரய ஆவணம் எண்.3193/2018 எண் கொண்ட கிரய ஆவணத்தின் நகல் என்றால் சரிதான். மேற்படி கிரய ஆவணம் R. சோமசுந்தரம் மற்றும் R. சுயம்பு இருவரும் ஐயாதுரை என்பவருக்கு கிரயம் கொடுத்த ஆவணம் என்றால் சரிதான். **மேற்படி கிரய ஆவண எண். வா.சா.ஆ.11 ஆக 2 மற்றும் 3 ம் பிரதிவாதி தரப்பு எதிர்தரப்பு ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது**. வா.சா.ஆ.11 ல் 3 ம் பக்கத்தில் முன் பத்திர ஆவணங்கள் விபரம் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.11 ல் 9 ம் பக்கத்தில் கிரய பத்திர விஸ்தீரணம் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி விபரத்தில் 25 சென்ட் என்பது கைவச அனுபோகத்தின் படி ரீசர்வே படி 27.17 சென்ட் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதிகபடியாக இருக்கும்படியாக சொல்லக்கூடிய 2.17 சென்ட் குறித்து எவ்வித விபரமும் குறிப்பிடப்பட வில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.11 ல் 10 ம் பக்கத்தில் சொத்தின் 4 பக்க எல்கைகள் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

மேற்படி எல்கையில் மேற்கு பக்கம் சிதம்பரநாதன் மகன் கனகசபாபதி சொத்து என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மொத்தம் ரீசர்வே எண்.424 ன் விஸ்தீரணம் என்ன என்றால் தெரியாது. ரீசர்வே எண்.424 ல் எத்தனை சப்டிவிஷன் உள்ளது என்றால் அது பற்றி தெரியாது. ரீசர்வே எண்.424 ல் இருக்கும் அனைத்து சப்டிவிஷன் விஸ்தீரணங்களும் மொத்தம் ரீசர்வே எண். 424 ன் விஸ்தீரணத்துடன் சமமாக இருக்க வேண்டும் என்றால் சரிதான். அவ்வாறு விஸ்தீரணம் குறித்து அனைத்து சப்டிவிஷனுக்கும் பத்திரபதிவு

செய்யப்பட்டால் தான் மேற்படி சப்டிவிஷனுக்குரிய விஸ்தீரணம் உரிய நபருக்கு உரிமைப்பட்டதாகும் என்றால் சரிதான். வா.சா.ஆ.11 ல் 9 வது பக்கத்தில் மேற்படி புரயிடம் பழைய சர்வே படி பழைய சர்வே 1923 ஏ நம்பரில் 23 சென்ட்டும் பழைய சர்வே 1923 பி நம்பரில் 2 சென்ட்டும் சேர்த்து ஒன்றாக கிடப்பு மொத்தம் 25 சென்ட் என்று காணப்படுகிறது என்றால் சரிதான். வா.சா.ஆ.11 ல் மிகுதியாக கூறப்படும் 2.17 சென்ட்டுக்கு சர்வே படியோ, போக்குவரவு படியோ தாசில்தார் முழுமையாக விசாரணை செய்திருக்க வேண்டும் என்றால் சரிதான். அதற்கான விசாரணை அறிக்கையை நான் கொண்டு வந்துள்ளேனா என்றால் அது இணையவழியாக மனு செய்து பட்டாமாற்றுதல் செய்யப்பட்டுள்ளதால் விசாரணை அடிப்படையில் தான் பட்டா மாற்றம் செய்யப்பட்டது.

மேற்படி இணையவழி பட்டா மாற்றம் எந்த ஆண்டு செய்யப்பட்டது என்றால் 2020 ல். வா.சா.ஆ.9 ல் தாசில்தார் யார்யாரை விசாரித்து பட்டாமாறுதல் உத்தரவு வாங்கினார் என்ற விபரம் துலங்காது என்றால் சரிதான். மேலும் களஆய்வு செய்து அதிகபடியான 2.17 சென்ட் இடம் எந்த இடத்தில் யார் கைவசத்தில் உள்ளது என்ற விபரம் வா.சா.ஆ.9 ல் துலங்காது என்றால் சரிதான். மேற்படி பட்டா மாறுதல் உத்தரவு சட்டவிதிமுறைகள் படியோ அல்லது அரசு guideline வழிகாட்டுதலின் படியோ முறையான முழுமையான விசாரணை எதுவும் இன்றி ஒருதலை பட்சமாக செய்யப்பட்டதாக காணப்படுகிறது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.9 ல் நான்குபக்க உரிமையாளர் யாவரையும் அழைத்து ஆவணங்கள் அடிப்படையிலும் களஆய்வின் அடிப்படையிலும் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என்றால் சரியல்ல. மேற்படி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாக எந்த ஆவணத்தில் துலங்கும் என்றால் மனுதாரர் சமர்ப்பித்த பதிவுசெய்யப்பட்ட ஆவத்தின் அடிப்படையில் விசாரணை மேற்கொள்ளப்பட்டு பட்டா வழங்கப்பட்டது. பதிவு செய்யப்பட்ட ஆவணமான

வா.சா.ஆ.11 ல் விஸ்தீரணம் குறித்த ஒரு தெளிவற்ற தன்மை இருக்கின்றபோது மேற்படி கூடுதல் விஸ்தீரணம் குறித்து மேற்படி சர்வே எண்ணில் உள்ள அனைத்து உரிமையாளருக்கும் அறிவிப்பு கொடுத்து அழைத்து விசாரணை செய்திருக்க வேண்டும் என்றால் மேற்படி சர்வே எண்ணில் விலைக்கு கொடுத்த இரண்டு நபர்கள் தவிர்த்து வேறு நபர்கள் பெயர் இல்லாத காரணதினால் பட்டாமாறுதல் செய்யப்பட்டது. வா.சா.ஆ.9 முற்றிலும் தவறானது மற்றும் வெளிப்படைத்தன்மையற்றது என்றால் சரியல்ல.

ஒரு சப்டிவிஷனில் 2.17 சென்ட் அதிகமாக காணப்படுமானால் அதன் முழுமையான சர்வே எண்ணில் மாற்றம் காணப்படும் என்றால் சரிதான். படிவம்-7 படி ஏழு நாட்களுக்குள் பட்டா மாறுதல் செய்ய படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து இடங்களிலும் விளம்பரப்படுத்தப்பட வேண்டும் என்றால் தெரியவில்லை. மேற்படி விபரங்கள் தெரியாது என தாசில்தார் கூற இயலாது என்றால் சரியல்ல. தாசில்தார் முறையான நடிவடிக்கை மேற்கொண்டு பட்டா மாறுதல் செய்யப்படாததால் தாசில் தார் மனுதாரருக்கு வழங்கிய பட்டா பாஸ்புக் மற்றும் சர்வேயர் களஆய்வு செய்யாமல் ஏற்படுத்திய அளவுகள் அனைத்தும் ஆவணங்களுக்கு எதிரானதும் மனுதாரருக்கு உரிமைக்கு மீறிய பரப்பினை அவருக்கு பட்டாபாஸ்புக் வழங்கியது செல்லாது என்றால் சரியல்ல. சர்வே எண்.424/2 க்கு மேற்கே 424/18 சொத்து காணப்படுகிறது என்றால் சரிதான். வா.சா.ஆ.5 சர்வே எண். 424/18 க்கான பட்டா அதன் விஸ்தீரணம் 6 ஏர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது அதன் உரிமையாளர் கனகசபாபதி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

மனுதாரர் கொடுத்த மனுவின் தொடர்ச்சியாக அவர் ஏற்படுத்திய அழுத்தத்தின் காரணமாக ஒரு தலை பட்சமாக பட்டா மாறுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதால் மேற்படி நடவடிக்கை முழுமையாக செல்லாது என்றும் மேற்படி சர்வே எண்ணில் மீண்டும்

களஆய்வு செய்து மிகுதியாக கூறும் 2.17 சென்ட்டை முன்ஜென்மிக்கு உரிமைப்பட்ட விஸ்தீரணம் 25 சென்ட் மிகுதியாக உள்ள இடத்தில் அனைத்து உரிமையாளர்களின் ஆவணங்களையும் முன் ஆவணங்களையும் பரிசீலனை செய்து அளவுகள் மேற்கொண்டால் வாதி ஐயாதுரைக்கு எவ்வளவு சொத்து அவரது நான்கு பக்க எல்கைக்கு விஸ்தீரணங்கள் சொல்லப்படும் என்றால் சரிதான்.

**முதல் விசாரணை முடிக்கப்படுகிறது.**

**குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**